# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,087 — 1960 මාර්තු 18 වැනි සිකුරාද — 18.3.1960

12,087 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 73 | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 75 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 75 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 76 | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### வித்தியா பகுதி

#### 1 ந் தர வித்தியாதரிசி பதவிகள்

கீழே காணும் 4 ம் பந்தியிற் கொடுபடும் நிபந்தனைகளைத் திருப்தி செய்யும் ஆண்களிடமும் பெண்களிடமுமிருந்து இப்பகுதியில் ஏற்படும் 1 ந் தர வித்தியாதரிசி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படு கின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் பத்திர முறையில் தயாரிக்கப் பட்டு 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக “வித்தியாதிபதி (பரிபாலனக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2” என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. குறித்த பதவிகளுக்கான சம்பள விகிதம் பின்வருமாறுகும் :—

வருடாந்தம் ரூ. 120 கொண்ட 4 சம்பள உயர்ச்சிகளுடனும், ரூ. 180 கொண்ட 8 சம்பள உயர்ச்சிகளுடனும், ரூ. 240 கொண்ட 6 சம்பள உயர்ச்சிகளுடனும் வருடாந்தம் ரூ. 3,420 தொடக்கம் ரூ. 6,780 வரை, வருடாந்தம் ரூ. 4,080, ரூ. 4,800, ரூ. 5,580 ஆகிய சம்பளங்களைப் பெற முன் திறமைக் கடப்புப் படிகள் உண்டு. இச்சம்பள விகிதம் பட்டதாரி களுக்கே அதாவது இவ்விளம்பரத்தின் 4 (i) ம், (ii) ம் பிரிவுகளின் பிரகாரம் நியமனம் பெறும் தகைமை உடையவருக்கே அமையும். சம்பள விகிதங்கள் தற்போது சம்பள, பதவி நிர்ணயக் கொமிஷனுல் பரிசீலனை செய்யப்பட்டு வருவதால் சம்பள, பதவி நிர்ணயக் கொமிஷனின் சிபார்சுகள் அரசாங்கத்தால் சீர்தூக்கப்பட்டு பொருத்தமான ஒரு சம்பள விகிதம் நிர்ணயிக்கப்படும் வரை, இதுகாலவரை இப்பதவிக்கு விண்ணப் பஞ் செய்ய உரித்தற்றவராயிருந்த பயிற்றப்பட்ட முதலாம் வகுப்புத் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களும் முதலாம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களும், இத்திட்டத்தின் கீழ் தமது தற்போதைய சம்பள விகிதங்களிலேயே நியமிக்கப்படுவர்.

3. (i) இப் பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். தெரிவு செய்யப்படுவோர் கைம்பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பளத்திட்டநிதிக்குக் கட்டணம் கட்டுவர். பெண் உத்தியோகத்தர்கள், 1957 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதிய 372 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக் கிணங்க இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய சேவையில் சேர விரும்புகின்றனரோ என நியமனம் பெற்ற திகதியிலிருந்து 10 வருடத்துக்குள் தீர்மானிக்கலாம்.

(ii) நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு வருட காலத்துக்கு பதில் முறையில் நியமிக்கப்படுவார்.

(iii) வித்தியாதரிசியாக நியமிக்கப்படும் காலத்தில் அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் காரணத்தால் தகுதிகாண் காலமின்றி நியமிக்கப் படுவோர், நியமனம் பெற்ற 3 வருட காலத்துக்குள் 27.1.59 ந் திகதிய 473 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தின் 2 ம் பந்தியின் (அ) ம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள சிங்கள திறமைப் பரீட்சையில் சித்தியடைந்து தாம் கடமை புரியும் பாஷையிலும் உத்தியோக பாஷையிலும் வேண்டிய தகைமையைப் பெறவேண்டும். அங்ஙனம் உத்தியோக பாஷையில் தகைமை பெறத் தவறுவோர் தொடர்பில், அவர்கள் அதனைப் பெறு தற்கு 3 வருடத்துக்குக் கூடுதலாக எடுக்கும் காலத்துக்குச் சமனை ஒரு காலத்துக்கு அவர்களுடைய சம்பள உயர்ச்சிப் பணங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

(iv) இப் பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர் யாவரும் அரசாங்க விதி களும் பிரமாணங்களும், கல்விச் சட்டங்கள் ஆகியவற்றில் நடைபெறும் பரீட்சையில், நியமனம் பெறும் 3 வருடத்துக்குள் சித்தியெய்தவேண்டும். அங்ஙனம் 3 வருடத்துக்குள் சித்தியெய்தத் தவறுவோர் தொடர்பில் அவர்களின் சம்பள உயர்ச்சிப் பணங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

(v) தெரிவு செய்யப்படுவோர், மேலும் சேவை புரிவதற்குத் தகுதி யற்றவராகக் காணப்படுமிடத்து, தகுதிகாண் அல்லது பரீட்சார்த்த முறைக் காலத்தில் எந்நேரத்திலேனும் சேவையிலிருந்து நீக்கப்படக்கூடும். நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான பதவிகளை வகிப்போர் இப் பதவிகளில் நியமிக்கப்பட்டு அவர்களுடைய பதில் சேவைக் காலத்தில் அல்லது அக்கால முடிவில், அவர்கள் மேலும் சேவை புரிதற்குத் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து, அவர்கள் தங்களுடைய நிலையான பதவிகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

4. (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைத் திருப்திசெய்வதுடன் போதுமான அத்தாட்சிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) ஏற்கனவே அரசினர் சேவையில் இல்லாதவராயின், 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 25 ந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலை ஒன்றில் பட்டம் பெற்றவராய். இருத்தல் வேண்டும், அல்லது

(ii) பயிற்றப்பட்ட 1 ம் வகுப்புத் தராதரப் பத்திரம் அல்லது ஆசிரியர் 1 ம் வகுப்புத் தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராகவும் 12 வருட திருப்திகரமான ஆசிரிய சேவை அல்லது வித்தியா பகுதியில் ஆசிரிய தொழிலுடன் சம்பந்தப்பட்ட சேவை புரிந்தவ ராயும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகள் சி. பா. த. ப./க. பொ. த. ப. பரீட்சைப் படியில் சிங்களம் அல்லது தமிழ் மூலம் பாஷையில் அல்லது இலக்கியத்தில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—சுயபாஷை மூலம் நடாத்தப்படும் க. பொ. த. ப. (சாதாரண தரப்) பரீட்சை தற்பொழுது நடாத்தப்படாத சி. பா. த. ப. சுயபாஷைப் பரீட்சைக்குச் சமனுகக் கருதப்படுகிறது. 1957 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கமாக மும்மொழி களிலும் நடைபெறும் க. பொ. த. ப. பரீட்சை ஒரு பரீட்சையாக நடாத்தப்படுகிறதென்றும் மேற்குறித்த சிங்கள அல்லது தமிழ் பாஷை வினுத்தாள் (அ) ம் பாடத்திட்டத்தின் கீழ் உள்ள தையே—(ஆ) ம் பாடத்திட்டத்தின் கீழ் உள்ளதையல்ல— குறிப்பதென்வும் கவனிக்க வேண்டும்.

(ஈ) நல்லொழுக்கம் உடையவராயும் சுகதேகியாயுமிருத்தல் வேண்டும்.

(5) விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பத்திரம் ஏற்கப்பட மாட்டாது) ;

(ii) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரமும் தொழில் தராதரப் பத்திரமும் (இருப்பின்) ;

(iii) சமீப காலத்தில் பெற்றுள்ள இரு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கெனவே அரசினர் சேவையிலுள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை) ;

(iv) சிங்களத்தில் பெற்றுள்ள அறிவு பற்றி தகுதிவாய்ந்த ஒருவரிடமிருந்து பெற்ற சாட்சிப் பத்திரம் அல்லது யாதேனும் சான்றுப் பத்திரம்.

அரசினர் சேவையிலுள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் அனுப்புவதிலிருந்து மாத்திரமே தவிர்வளிக்கப்படுகின்றனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

6. அரசினர் சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தி அவை இக்கந்தோரில் கிடைக்கப்படின், அவை உரிய பகுதித் தலைவர்களால் விதிக்கப்பட்ட திகதிக்குள் பெற்றுக்கொள்ளப்பட்டு தகுந்த காரணங்களினால் அவை தாமதிக்கப்பட்டவையென்றும் அவ்வப் பகுதித் தலைவர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறும் சிபார்சு செய்தாலேயன்றி, அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை முகாமைக்காரர் மூலம் அனுப்ப வேண்டும். குறித்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படின் அவர்களைச் சேவையிலிருந்து விலகவிட முடியுமோ எனக் குறிப்பிடுமாறு முகாமைக்காரர்களை விண்ணப்பதாரிகள் கேட்கவேண்டும். அரசினர் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் மூலம் அனுப்ப வேண்டும். அரசினர் பாடசாலை அதிபர்கள் தமது விண்ணப்பங்களை நேரே அனுப்பலாம். விதிக்கப்பட்ட மாதிரிப் பத்திர முறையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள முறையில் விண்ணப்பப் பத்திரம் தயாரிக்கப்படவேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் இப் பகுதியில் கிடைக்கமாட்டா. விண்ணப்பங்கள் இப்பகுதியிலுள்ள எவ்வுத்தியோகத்தர் பெயருக்கும் அனுப்பப்படலாகா.

7. பகிரங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் அமைபவையும் இவ் வர்த்தமானப் பத்திரிகையில் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்படுபவையுமான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறும் விண்ணப்பதாரிகள் கேட்கப்படுகின்றனர்.

எஸ். எவ். டி சில்வா,
வித்தியாதிபதி.

கோவை இல. ABB. 3379,
வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச் மீ 7 ந் உ.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

1. முழுப்பெயர் : ————.
(தடித்த எழுத்தில் தெளிவாகக் கொடுக்கவும்)

2. விலாசம் : ————.

3. பிறந்த திகதியும் இடமும் : ————.

(i) விண்ணப்பதாரி : ————.

(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.

(iii) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.

(iv) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிக்கொப்பாட்டன் : ———— (விண்ணப்பதாரியின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி)—**மூலம் அல்ல**—(வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் 5 (i) ம் பந்தியைப் பார்க்கவும்) இணைக்கப்பட வேண்டும்).

4. விண்ணப்பதாரி விவாகஞ் செய்தவரா ?

(i) விவாகஞ் செய்தவராயின் மனைவியின்/கணவரின் பெயரும் அவருடைய தொழில் பற்றிய விபரங்களும் : ————.

5. (i) விண்ணப்பதாரியின் சாதியமும் குலமும் : ————.

(ii) இலங்கையராயின், வம்சாவழியிலா பிரசாவுரிமைப் பதிவாகவா ? ————.

6. (i) தற்போதைய் தொழிலும் அதுபற்றிய விபரங்களும் : ————

(ii) ஆசிரியராயின்,

(அ) பதிவிலக்கம் : ————.
(ஆ) தற்போதைய வருடாந்தச் சம்பளம் : ————.
(இ) சம்பள விகிதமும் சம்பள உயர்ச்சித் திகதியும் : ————.

7. கல்வித் தராதரங்கள் : ————.

(தராதரப் பத்திரங்களின் பிரதிகள்—**மூலங்களல்ல**—இணைக்கப்படவேண்டும். வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் 5 (ii) ம் பந்தியைப் பார்க்கவும்).

(அ) பட்டப் பெயர் : ————.

(ஆ) சர்வகலாசாலை : ————.

(இ) பரீட்சைச் சுட்டிலக்கம் : ————.

(ஈ) வருடம் : ————.

(உ) பாடங்கள் : ————.

(ஊ) சர்வகலாசாலை மாணுக்கராகவா வெளி மாணுக்கராகவா : ————.

8. (i) தொழில் தராதரங்களும் ஏனைய தராதரங்களும் : ————.

(ii) பயிற்றப்பட்ட ஆசிரியராயின் கீழே கேட்கப்படும் விபரங்களைக் கொடுக்கவும் :—

(அ) பயிற்சி பெற்ற ஸ்தானம் : ————.

(ஆ) பயிற்சி பெற்ற காலம் : ————.

(இ) சிங்களமா/தமிழா/ஆங்கிலமா : ————.

(தராதரப் பத்திரத்தின் பிரதி—**மூலமல்ல**—இணைக்கப்பட வேண்டும். வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் 5 (ii) ம் பந்தியைப் பார்க்கவும்).

9. பெற்றுள்ள அறிவு : ————.

(அ) சிங்களத்தில் : ————.

(ஆ) தமிழில் : ————.

(வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் 4 (இ) ம் பந்தியைப் பார்க்கவும்).

10. படிப்பித்தல் அனுபவம் (படிப்பித்த பாடசாலைப் பெயர்கள், வகித்த பதவிகள், காலங்கள்—திகதிகளுடன்—பின்வரும் முறையில் கொடுபட வேண்டும்) :—

| பாடசாலைப் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக் காலம் | | | விலகியதற்கான காரணம். மாற்றம்/சேவையிலிருந்து தாமாக விலகுதல்/சேவையிலிருந்து நிறுத்தப்படுதல்/சேவையிலிருந்து நீக்கப்படுதல் காரணமாகவா ? |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரு. | மா. | நாள் | |
| | | | | | | | |
| | | | மொத்தம் | | | | |

11. இராணுவச் சேவை விபரங்கள் :————

(விலக்கப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்).

12. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுப்பவர்களின் பெயர்கள் (இரண்டுக்கு மேற்படாதவற்றின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள், உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுபட்டுள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவையென்றேனும் சரியற்றவையென்றேனும் நியமனத்திற்கு முன்னர் கண்டுபிடிக்கப் பட்டால் நான் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நஷ்ட ஈடுமின்றிப் பதவியிலிருந்து நீக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என்று அறிவேன்.

திகதி : ————

————
கையொப்பம்.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

1/23/6/3 (ஜி) II ம் பாகம்.

## மத்திய எழுதுவினைஞர் பரீட்சை—பெப்ருவரி, 1958

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ம் திகதி, 1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ந் திகதி, 1959 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ந் திகதி, 1959 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ந் திகதி, 1960 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ந் திகதி 11,603, 11,832, 11,852, 12,002, 12,665 இலக்கங்களைக் கொண்ட அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட, 1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம், 1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ந், 1959 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ம், 1959 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ந், 1960 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 ம் திகதிகளிடப்பட்ட தனித்தனி விளம்பரங்களைத் தொடர்ந்து, 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் தபால் எழுதுவினைஞர் சேவையின பொது வகுப்பில் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

| பெயர் | விலாசம் |
|---|---|
| இரத்தினசாமி, எஸ். | வட்டு கிழக்கு, சித்தங்கேணி |
| குணதிலக்க, எம். டீ. எ. | தெலதவத்தை வீதி, உடுகலே, வட்டுவை |
| குணபால, டபிள்யூ. எ. | வலவியத்தை, எல்லக்கல்லே |
| சந்திரசேன, கே. | வேதகமம், பண்டாரகமம் |
| சாமுவல், பி. | சி. சி. பாடசாலே, அறகொடை, பொல்காவலே |
| சில்வா, கே. ஜஸ்ட்டின் | " சம்மான்குல " எடுவாறை, ஹொறனே-வழியாக |
| சுமனதாச, ஈ. டி. | இடகொடை, மத்துகமம் |
| சேநாநயக்க, டபிள்யூ. ரீ. | அலுத்கமம், புண்டாரகமம் |
| சோமபால, எ. டி. | இகல யாகொடை, கம்பஹ |
| சோமரத்தின, எச். எம். | பல்லேவலே, உடுபடவை |
| டிங்கிரிபண்டா, டி. ஆர். | புலத்தெனிய, கேகாலே |
| தயானந்த, கே. எம். | பெல்கவத்தை, கல்பவிலே, கெக்கநதுவை |
| தயாசேன, டபிள்யூ. டபிள்யூ. | 346, நீர்கொழும்பு வீதி, நிற்றம்புவை |
| தேகிஸ் சிஞ்ஞோ, கே. ரி. | கூட்டுறவுச்சங்கம், போதிமுல்லே, பறக்கடுவை |
| பர்ஞந்து, பீ. ஜீ. ஈ. | வேரல்லே, மகாவேவை |
| பர்ஞந்து, பீ. ரீ. | சாயக்காரமுல்லே, தூனகஹ |
| பியதாச, கே. | தெதல்ல அரசினர் சிரேஷ்ட பாடசாலே, தெல, இரத்தினபுரி |
| பியதாச, ஆர். | அலுத்கெதறை, அத்தடுவை, பலத்துவை |
| பிரேமசந்திர, எச். | " சிங்கவாச " முல்லேகமை, ஹோமாகமை |
| பெரேரா, எச். எஸ். | நடுன்கமுவை, வெலிவேரியை, கம்பஹா |
| பெரேரா, கே. எப். ஆர். | நாசறத் பற்றேபொலே, தூனகஹ |
| பேரேரா, கே. எஸ். பி. | பத்துலுஓயா தெற்கு |
| பெரேரா, எம். சி. எல். | 711, கடலானே, மொறட்டுவை |
| பெரேரா, கே. ரீ. ஜே. சீ. | நயினமடம், வென்னப்புவை |
| பெரேரா, எஸ். டபிள்யூ. பீ. எஸ். கியூ. | பண்டாரவத்தை, காக்காப்பள்ளி |
| பொடிஅப்பு, எம். பீ. | மாறகாவத்தை, கொறவல்லே, வலஸ்முல்லே |
| ரெஸ்லி, எ. டி. | இல. 20, பெலன்விலே, பொறலஸ்கமுவை |
| விக்கிரமரத்ன, டபிள்யூ. பீ. | மைலவலானே, கிறின்டிவலே |
| றெபிசன், எ. எல். | அம்பலாவத்தை, கெற்றிக்வத்தை, காலி |
| ஹீன்அப்பு, எச். ஜீ. | 30, யட்டவத்தை, மாத்தளே |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனால், இடங்கள் காலியாக வரும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்தமானவையாகவும் சேவையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டனவுமாகும்.

3. பரீட்சார்த்திகளுடன் தபாற் கந்தோர் தலைமை அதிபர் நேரிற் தொடர்பு வைப்பர்.

திறைசேரி, கொழும்பு,
1960 ம் வருடம் மார்ச்சு மாதம் 10 ம் திகதி.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேரிப் பிரதிச் செயலாளர்.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

கண்டி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 20 ந் திகதி புதன்கிழமை காலே 10 மணி வரையும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து தென்னேவெலே குளமும், தொழிலாளர் இல்லமும் கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | ஒப்பந்தக்காரரின் பதிவு செய்யப்பட்ட தொகை ரூபா | ரெண்டர் பணம் ரூபா |
|---|---|---|
| தென்னேவெலே அணைக்கட்டு | 9,000 | 25 |
| தொழிலாளர் இல்லம் | 16,500 | 25 |

கேள்விப் பத்திரங்கள் 18.3.60 ல் இருந்து 18.4.60 வரையும் நீர்ப்பாசனக் கந்தோரில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க வேலேகளில் ஈடுபட்டிருக்கும் ஒப்பந்தக்காரர், விண்ணப்பம் செய்யும் தருணம் அந்தந்த அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப்பத்திரம் காட்டவேண்டும்.

கண்டி பெரும்பாக நீர்ப்பாசன இலாகா பொறியியலாளர் அவர்களால் 1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 20 ந் திகதி காலே 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர் விரும்பினுல் பிரசன்னமாயிருக்கலாம். ஏனைய விபரங்களே உப நீர்ப்பாசன இலாகா மாத்தளேயில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன இலாகா,
மாத்தளே.

நீர்ப்பாசன இலாகா,
பொறியியலாளர், மாத்தளே உபபிரிவு.

## நீர்ப்பாசன இலாகா

மொனருகலே உப-பகுதியிலுள்ள எற்றிமொலவாவித் திட்டத்திலுள்ள 7 ம் சங்கிலியிலுள்ள 1 ம் இலக்க உடைப்பை நிரப்புவதற்கான கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 20 ந் திகதி காலை 10 மணி வரைக்கும், பண்டாரவளையிலுள்ள பெரும்பாக பொறியியலாளர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரங்களை மொனருகலே உப-கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். உப-கந்தோரில் பிளான்கள் பார்ப்பதற்கும், வேறு விபரங்களை அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்து, இரு பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும்.

ஒரு கச்சேரியிலேனும் அல்லது மொனருகலே உப-கந்தோரிலேனும் ரூபா 50 கட்டுப்பணமாய் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 19.4.60 வரைக்கும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள், நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 50,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்க வேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின், அவ்வேலைகளைப்பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச் செய்ய வேண்டும்.

ஓ. எஸ். சந்திரரட்ன,
மொனருகலே உப பகுதி அதிகாரி.

1960 ம் ஆம் மார்ச்சு மீ 5 ந் உ.

---

**சிதுவையில் உள்ள சாராய வடிசாலைக்கு 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் திகதியிலிருந்து 1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதிவரைக்கும் கள்ளு வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள்**

1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் திகதியிலிருந்து 1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதிவரை சிதுவையிலுள்ள அரசினர் சாராய வடிசாலைக்கு கள்ளு வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கைத்தொழில் மீன்பிடி அமைச்சின் கேள்விப் பத்திர சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 6 ந் திகதி, நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.

மதுவரி அதிகாரியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து சகல விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ரீ. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

கொழும்பு 6,
1960 ம் ஆம் மார்ச்சு மீ 14 ந் உ.

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## ஏல விற்பனவு

இதன் கீழ்க் குறிக்கப்பட்ட பொருட்கள் இம் மாதம் 31 ந் திகதி காலை 9 மணி தொடக்கம் கொழும்பு பார்சன் வீதி, அரசாங்க பண்டசாலைத் துறையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஹம்பர் மோட்டார் வாகனங்கள், ஜீப்புகள், பாக்கர் 51 பவுண்டன் பேனை, தட்டெழுத்து இயந்திரங்கள், உருக்குப் பீப்பாக்கள், துண்டுத் துணிகள் முதலியன.

இப்பொருட்களை 30 ந் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் அரசாங்க பண்டசாலைத் துறையில் பார்வையிடலாம்.

விற்பனை முடிந்தவுடன் பணம் கட்டி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

எல். ஏ. விஜயசிங்க,
அரசாங்க பண்டசாலை அதிபர்.

அரசாங்க பண்டசாலைத் துறை,
கொழும்பு, 1960 ம் ஆம் மார்ச்சு மீ 14 ந் உ.

---

## விளம்பரம்

8 அடி 9 அங்குலம் × 4 அடி விஸ்தீரணமுள்ள, பாவிக்கமுடியாத தும்பு கண்ணுடித் தோணி ஒன்று, 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் திகதி காலை 10 மணிக்கு திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இதனை வாங்குபவர் உடனே பணம் கட்டித் தோணியை அவ்விடத்தி லிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

M. R. குணரத்தின,
உப பொலிஸ் அத்தியட்சர்,
திருகோணமலை.

பொலிஸ் காரியாலயம்,
திருகோணமலை, 8.3.60.

---

## விளம்பரம்

1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 1 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 26 ந் திகதி சனிக்கிழமை பி. ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ணுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆம் பங்குனி (மார்ச்சு) மீ 1 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது